ET 1553199967
24/6/2022

நாள் 23.6.2022




24 JUN 2022

அனுப்புநர்

எஸ்.ஜெகதீசன்,
1/24/11.திருவள்ளுவர் தெரு,
மறைமலை நகர்,
என்எச்.3, செங்கற்பட்டு மாவட்டம்-603209

பெறுநர்

பொது தகவல் அலுவலர்,/அரசு செயலர்,
கல்வித் துறை (மெட்ரிகுலேஷன் கல்வி பிரிவு),
தலைமைச் செயலகம்,
சென்னை-600009.

15474
28/6/22

அன்புடையீர்,

தஉச 2005இன்கீழ் கீழ்க்காணும் தகவலைத் தெரியபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தகவல் எண்.1: தமிழக அரசின் அனுமதி பெற்று இயங்கிவரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் எண்ணிக்கையினை தஉச2005 பிரிவு 4ன்கீழ் வழங்கவும்.

தகவல் எண்.2: தொழில் கல்வி பாடத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் பெயர்கள் விலாசத்துடனும் மற்றும் அதனை ஆய்வு செய்து அறிக்கை வழங்கும் அலுவலரின் பதவி தன்மைக் குறித்த தகவலினை வழங்கவும்.

தகவல் எண் 3: தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் குறைந்த பட்சம் 5ஏக்கர் பரப்பளவில் விளையாட்டுத் திடல் இருக்கவேண்டுமென்கின்ற அரசின் சட்ட விதியின் அடிப்படையில் 5ஏக்கர் பரப்பளவில் விளையாட்டுத் திடல் கொண்ட பள்ளிகள் குறித்த தகவலினை வழங்கவும்.

தகவல் எண் 4: தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கட்டிடங்கள உறுதி தன்மைக் குறித்து பிரதி ஆண்டும் வட்டாட்சியரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட்டு வரும் பள்ளிகளின் விவரத்தினை வழங்கவும். அதனை ஆய்வு செய்வதற்கு தஉச2005பிரிவு 2ன்கீழ் அனுமதி வழங்கவும்.

தகவல் எண்.5: மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர் சேர்க்கையின்போது, மலைசாதி, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வரும் விகிதாசார பிரதிநிதித்துவம் குறித்த தகவலினையும், அதனை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துவரும் அலுவலரின் நாட்குறிப்பின் நகலினை(1.4.2020 முதல் 31.3.2021 வரை) வழங்கவும்.

தகவல் எண் 6: தொடர் அங்கீகாரத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே குறை நிவர்த்தி அறிக்கையினை சமர்ப்பித்து வரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்த தகவலினை (2020-21) வழங்கவும்.

தகவல் எண் 7: சாரண சாரணிய இயக்கம் இளஞ் செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்புகளில் அங்கம் வகிக்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்த தகவலினை தஉச2005 பிரிவு 4ன்கீழ் வழங்கவும்.

தகவல் எண் 8: குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி தீ அணைப்பான்கள் (Fire Extinguisher) உரிய முறையில் அனுமதி பெற்று பொருத்தப்பட்டு முறையாக இயங்கிவரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்தும், தீயணைப்புத் துறையிடமிருந்து முறையாக சான்றிதழ்கள் பெற்று இயங்கி வரும் பள்ளிகள் குறித்த தகவலினை வழங்கவும்.

எஸ்.ஜெகதீசன்
S. Jagadeesan
23-06-2022